உ

சிவமயம்.

# வேலாயுதவெண்பா.

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள்,
பரம்பரையில்
திருவையாற்றிலெழுந்தருளிய
சிவாநந்தசுவாமிகள்
மாணாக்கருளொருவராகிய
தஞ்சைமாநகரம்
கரந்தையம்பதியிலிருக்கும்

**ந-வீரபத்திரபிள்ளையவர்கள்**

இயற்றியது.

இஃது
மைசூர் கோட்டைக்குள்வடக்குவீதி
மிட்டாயிக்கடை வீருப்பிள்ளையவர்கள்
குமாரர்
கண்ணுசாமிபிள்ளையவர்களால்
சென்னைத் தண்டையார்பேட்டை
இலக்ஷ்மீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வர௵ ஆனிமீ

சிவமயம்.

# சாத்துகவிகள்.

தஞ்சைமாநகரம்

ம-ா-ா-ஸ்ரீ, சதாவதானம்

## சுப்பிரமணியஐயரவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த திருத்தாதை யெனவனவாய்க் குடிகொண்ட
செயலுக் கேற்ப
நேர்பூத்த வவனணிபூ வெங்நிலத்த தங்நிலத்து
நீபத் தார்பூண்
டோர்பூத்த புயவேலோ னஃதெனவிஃ தலர்விரவா
தென்று வேட்ப
நார்பூத்த சதவெண்பா மாலைதந்தான் வீரபத்ர
நாவ லோனே.

சரதநிறை சித்துசிவா நந்தகுரு வருளான்முத்
தமிழ்த்தேன் பாலிக்
கிரதமெனு முக்கடலுண் டுயர்சங்க மெனுங்கற்கண்
டியல்வெற் பேறி
விரதநல்வே லாயுதவெண் பாவென்னு நறுமழையை
வீர பத்ர
வரதமுகில் பெய்ததனை யின்சுவையென் றுரைப்பதலால்
வகுக்கற் பாற்றே.

## சாத்துகவிகள்.

திரிசிரபுரம் மஹாவித்துவான்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணாக்கருளொருவரும்

தஞ்சை ஐஸ்கூல் தமிழ்த்தலைமைப்புலவருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ, மு-ஐயாசுவாமிபிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்மலியை யாற்றிடைவாழ் சிவாநந்த தேசிகன்றாள்
சென்னி சேர்ப்போன்
ஏர்மலிவை யகமுழுது மானதகற் பிதமெனவே
யெண்ணு மேலோன்
கார்மலிநற் கொடையாளன் வீரபத்ர னெனுமியற்பேர்
கண்ட தூயோன்
தார்மலிவே லாயுதவெண் பாநூறுஞ் செய்தமைத்தான்
றரணி மீதே.

---

ஷை ஐயாசுவாமிபிள்ளையவர்கள்

மாணாக்கருளொருவரும்

தரங்கம்பாடி மிசியூன்ஸ்கூல் தமிழ்த்தலைமைப்புலவருமாகிய

ம - ா - ா - ஸ்ரீ,

க - சுப்பராயபிள்ளையவர்களியற்றிய

நேரிசைவெண்பா:

வேதாக மப்பொருளின் மேவு சுவையனைத்தும்
ஈதாமென வுணர்ந்தோ ரின்புறத்—தீதகற்றி

பண்புகொளும் வீரபத்ர நாவலவ னன்கமைத்தான்
பண்புகொள்வே லாயுதவெண் பா.

---

ஷை ஐயாசுவாமிபிள்ளையவர்கள்
மாணுக்கருளொருவரும்
தஞ்சை முன்சிப்பால் - ச - வது யூனியன் ஸ்கூல்
தமிழ்த்தலைமைப்புலவருமாகிய
ம - ா - ா - ஸ்ரீ,
மாரிமுத்துஉபாத்தியாயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கஞ்ச மலர்வா ழுந்தணனுற் காணு
முலக வின்பமெலாம்
நெஞ்சிற் கனவு போலெண்ணி நிமலவே
லோன் றுண்மதிக்கும்
செஞ்சொற் புலமை வீரபத்த்
திறலோ னியற்று முதற்பாக்கள்
எஞ்சலில்லா வினைப்பகை யென்றெல்லா
முணர்ந்தோர் கொள்வாரே.

---

தஞ்சைமாநகரம் வித்துவான்

ம-ள-ள-ஸ்ரீ,

## மதுரைமுத்துஉபாத்தியாயரவர்களியற்றிய

சாத்துகவி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்வளர் வேதா கமபுரா ணமெலாஞ்
செழிக்க வெச்சமயத்து மேலாய்ப்
பேர்வளர் சைவ சமயமே யோங்கிப்
பெருகநல் லன்பர்கள் வாழக்
கார்வள ரிமைய கிரிமன னுள்ளங்
களிப்புறக் கஞ்சமா மலர்மேல்
ஏர்வளர் சகல வுலகமா தாவா
யெழுந்தருளிய வுமா தேவி.

பச்சிளங் கொங்கை பொழிதரு ஞானப்
பாலரு வாயினர் காட்டு
கைச்சிறு விரனே ராந்த னுண்மலர்வெண்
கவிமலர் நூறு வேலவர்க்கு
நிச்சய மாகச் சூட்டிய தேழு
நிலத்தின் மேனிலத்தி னின்றுயர்ந்த
மெய்ச்சி வாநந்த விருட் சத்திற்றழைத்து
விளைதரு வீரபத் திரமே.

சிவமயம்.

# வேலாயுதவெண்பா.

## காப்பு.

### விநாயகர்.

#### நேரிசைவெண்பா.

வேலா யுதா வெனவே வெண்பா வொருநூறும்
வாலாய மாயடியேன் வாழ்த்தவே—மேலாமா
குந்தமலத் தந்திமுகத் தொற்றைமருப் பத்தனெழிற்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

### பரமசிவம்.

மாமேவு பன்னிருகை வாலவடி வேலவனைப்
பூமேவு செந்தமிழாற் போற்றவே—தூமேவும்
வம்புலர்வு பைங்கடுக்கை மாலைசூடு முக்கணீசன்
அம்புயச்ச ரண்வணங்கு வாம்.

### வாலாம்பிகை.

சீர்பூத்த வார்கருணைச் செங்கைவடி வேலவன்மே
லோர்பூத்த வெண்பா வியற்றிடுவான்—வார்பூத்த
வள்ளத் துணைத்தனத்தாள் வாலாம் பிகைமலர்த்தாள்
உள்ளத்துள் வைப்பா முவந்து.

### குருவணக்கம்.

திண்மையுறுஞ் சங்கரற்குத் தேசிகனு யோங்காரத்
தன்மையருள் வேலா யுதத்திறைமேல்—ஒண்மையவெண்

பாமாலை யான்மொழிவேன் பண்பாஞ் சிவானந்தக்
கோமான் பதஞ்சிரமேற் கொண்டு.

## அவையடக்கம்.

தூமதியோர் செய்யுளின்முன் றொண்டனேன் சொல்செய்யுள்
பூமதிமுன் மின்மினியைப் போன்மெனினுஞ்—சேமமருள்
ஓங்கார வேலா யுதப்பெருமான் பேருறலாற்
பாங்காகக் கொள்வார் பரிந்து.

நின்மலமா மாடியிடைட் நேர்காண்போர்க் கவ்வவர்கள்
தன்முகமே தோற்றுந் தரம்போலிங்—கெம்முருகோ
ணிர்ந்தநா லாயுமவ ரெவ்வெவரோ வவ்வவர்தம்
புந்திவழி காட்டும் பொருள்.

# வேலாயுதவெண்பா.

## நூல்.

### நேரிசைவெண்பா.

மணிகொண்ட மார்தவனும் வாரிசனு மற்றைத்
திணிகொண்ட வானவருந் தேடும்—பணிகொண்ட
சுந்தரநின் றாளிணையைச் சொந்தமுட னென்றனுக்குத்
தந்தருள்வாய் வேலா யுதா. (க)

காராச் சுவைபொருந்துங் கன்னலெனி னும்மதனைச்
சீராகப் பக்குவங்கள் செய்யாமற்—போராருங்
கண்டாமோ மானுடமெய்க் கண்டுழனைப் போற்றுநின்
புண்டாமோ வேலா யுதா. (உ)

ஓராறு மாமுடிநீற் றெண்ணுதனன் னூலுரந்தோ
ளீராறு செங்கம் பிடையிணைத்தாள்—பாராரும்
என்னனையாம் வள்ளிதெய்வ யானையுடன் வந்தருள்வாய்
உன்னதனேவேலா யுதா. (௩)

தொல்லாழி யண்டமெலாஞ் சொன்னொடியின் மாற்றியவை
யெல்லாஞ்செய் வல்ல விறைவாவென் —பொல்லா
மனக்கலிதீர்த் தாநந்த வாழ்வையளித் தாளல்
உனக்கரிதோ வேலா யுதா. (௪)

துன்பச் சுமையுடலைத் தூற்றியுரந் தாக்கவெனக்
கன்புற் றெருவாக் கருள்செய்வாய்—முன்பொருநாண்
மாங்கனிக்கா வோரிமைப்பில் வையமெலாஞ் சுற்றிவந்த
ஓங்கணிசேர் வேலா யுதா. (௫)

வேறொன்று நாயேன் விரும்புகிலே னென்ஞான்றும்
ஆறென்று நின்னடியார்க் காம்பணியை—மாறின்றிக்

கையுறவே யுள்ளங் கனிந்து புரிந்தடியேன்
உய்யவருள் வேலா யுதா. (௬)

என்போ லுலகி லிழிந்தோரும் வானவருள்
உன்போ லுயர்ந்தோரு முண்டோசொல்—மின்போலத்
தோன்றியொழி யங்கமயற் றேயாத சேயருளத்
தூன்றியொளிர் வேலா யுதா. (௭)

இல்லவள்சே யத்தமெனு மீடணைகண் மூன்றுமென்
அல்லலுறு துன்கழற்கா ளாக்குவாய்—எல்லையிலாச்
சீர்மணக்கு மாநந்தச் சின்மயனே கன்னிபத்
தார்மணக்கும் வேலா யுதா. (௮)

சேலைமினுக் காலிழையாற் சிற்றிடையாற் கொங்கையினுன்
மாலைவெயில் போற்பூசு மஞ்சளினுல்—வேலின்
விழிக்கடையா லும்வெருட்டு மெல்லியர்க ணட்பை
ஒழிக்கவருள் வேலா யுதா. (௯)

தொக்கடர்ந்த விச்சடலந் தோற்றிவளர்ந் தின்றளவும்
ஒக்கவரு துக்கசுக முள்ளவெலாம்—பொக்கமுறுஞ்
சொற்பனமாய்க் காணுந் துணிவுறலென் றுன்னருளால்
விற்பனனே வேலா யுதா. (௧0)

ஊனு யுயிராயென் னுள்ளுணர்வா யெவ்வுலகுந்
தானுயு நின்றே தயங்குமுனை—யானுடித்
தோய்வதுவு மெவ்வண்ணந் தோய்ந்துமன மாதிகளொங்
கோய்வதுவும் வேலா யுதா. (௧௧)

ஆரண ஆ லாதிக் ககோசரமா நின்வடிவை
ஓரணியிட் டெவ்விதத்தி லோதுவனென்—பேரணியும்
போதகனே முன்னம் பொதிகைமுனிக் கோதியசிற்
சாதகனே வேலா யுதா. (௧௨)

மைகளையு நின்சரணர் வண்ணப் பணிபுரியாக்
கைகளையுங் காணுத கண்களையும்—மெய்குளிர
வந்தனஞ்செய் யாச்சிரமு மாமலரோ னென்றனுக்குத்
தந்தனனென் வேலா யுதா. (கங)

காரார் கருப்புகுந்திக் காசினியிற் காயமினி
வாரா வகையருளி வாழ்விப்பாய்—ஈராறு
தோளுடையா யாளுடையாய் சொன்னமணித் தண்டையணி
தாளுடையாய் வேலா யுதா. (கச)

சீர்முகமோ ராறுடைய செவ்வேளே நாயேனுக்
கோர்முகமே னுங்காட்ட வொண்ணுதோ—சார்முகநேர்
வெய்யவர விற்றுயிலும் விண்மெரு காகொடிய
சையமடு வேலா யுதா. (கரு)

உன்னு திருசெவியி லோர்செவியிற் கேனுமிப்போ
தென்னுர் மொழிகேட்க வில்லையோ—பன்னுட்
கருணைபொழி வானே கடையேனை யோம்பத்
தருணமிது வேலா யுதா. (கசு)

மாண்காலு நின்றாண் மறந்தடியே னிற்றைவரை
வீண்கால மேபோக்கி விட்டேனே—காண்காலன்
வந்தழைக்கு முன்னேநின் மாமலர்த்தா ளெய்துமதி
தந்தழைப்பாய் வேலா யுதா. (கஎ)

இன்னுங் கடத்தை யெடுத்துலகில் வாழ்ந்திடினு
மன்னுங் காத்திலையம் வாங்கிடினும்—உன்னை
மறவா வரந்தருவாய் வஞ்சமிலா நெஞ்சர்க்
குறவான வேலா யுதா. (கஅ)

துட்ட ருறவைத் துரத்தியுப் சாந்தநிறை
சிட்டருட னென்றெனையுஞ் சேர்த்தருள்வாய்—துட்டகுணச்

சங்கமுறுந் தானவர்தந் தானையெலாந் தூள்படவே
சங்கரித்த வேலா யுதா. (க௯)

நாட்டார் பழிக்கவுட னானெடுத்தே னல்லாலுன்
னாட்டா மனாநேயஞ் சற்றுமிலேன்—காட்டாய்நீ
அண்மையொடு சேய்மையிலா வானந்த வீட்டையும்
உண்மைநெறி வேலா யுதா. (உ0)

மாட்சிக் கதிநிலைதேர் மாதவர்தம் போதவிழிக்
காட்சிக் கதிட்டான காரணனே—மீட்சியிலாச்
சிந்தனையா னின்னைத் தெரிசிக்க வேயருள்வாய்
சந்ததமும் வேலா யுதா. (உக)

ஏதா கினுமெளியேற் கிங்கேர நீயொருவாக்
கோதா விடினா னுயிர்வாழேன்—போதாரும்
பாதா வுமைமகிழும் பாலா வனைத்துயிர்க்குந்
தாதாநல் வேலா யுதா. (உஉ)

அங்கமொரு மூன்று மறிசாட்சி யானேனைப்
பங்கமற நின்வடிவாப் பாவியா—திங்கிகழ்வு
செய்வாரோ டொன்றித் திரிவோரு மெப்பரிசால்
உய்வாரோ வேலா யுதா. (உ௩)

நம்பினவர்க் கின்புதவு நாதனென நாமமுனக்
கம்புவியோ ரோத லசத்தன்றே—எம்பால்
குரல்வேண்டுஞ் சொல்லியர்மால் கூடா வரநீ
தரல்வேண்டும் வேலா யுதா. (உ௪)

கண்ணா யிரத்தோனுங் காணருநின் பேருருவை
உண்ணாடிப் பாரா துழன்றேனே—மண்ணாதி
எல்லாமா யாவு மிலதாகி யேயிலகும்
உல்லாச வேலா யுதா. (உ௫)

தன்னூரு நின்கமலத் தாளிணையை யென்றனிரு
கண்ணூர வெக்காலங் காண்பேனோ—பண்ணூரம்
பாடிவரு மெய்யடியார் பார்வையெதி ரேவினைவில்
ஓடிவரும் வேலா யுதா. (உசு)

பத்திநெறி சற்றுமிலாப் பாவியேற் கெந்நாளிற்
சித்திநெறி காணுந் திறமருள்வாய்—தைத்தியர்கள்
வற்பவித்து வானுலகோர் வாழ்வான் சரவணையில்
உற்பவித்த வேலா யுதா (உஎ)

ஊனைப் புசிக்குமவ ரொச்சுலொழிந் துன்கருணைத்
தேனைப் புசிக்குநயந் தேடாமல்—ஏனையநூல்
கற்றென்ன விப்புவியிற் காணரிய வித்தையெலாம்
உற்றென்ன வேலா யுதா. (உஅ)

ஓவாவென் னுள்ளுணர்வா யோங்குஞ் சரவணப்
வாவாவென் றேதினமும் வாழ்த்துவர்க்குத்—தாவாமெய்ச்
சித்தியரு ளுத்தமனே சிற்றடியேற் கிப்பொழுதோர்
உத்தியருள் வேலா யுதா. (உகூ)

மாதரவி ரோதமதை மன்னுத நின்னடியர்
ஆதரவி லென்னைவைக்க லாகாதோ—ஓதரவிற்
றூங்கரியா ரும்பரவச் சூர்தடிந்து மெய்ப்புகழால்
ஓங்கரியார் வேலா யுதா. (௩0)

நன்னு யகமணிநீ ஞானும் பரமணிநீ
மன்னு கியசுப்ர மாமணிநீ—என்னுசைக்
கண்மணிநீ வேதமுடிக் கண்மணிநீ சர்வவுயிர்க்
குண்மணிநீ வேலா யுதா. (௩க)

அத்து மருணகிரி நாதர்க் கருள்செய்த
மூத்துக் குமரகுரு மூர்த்தியே—இத்தலத்திற்

கோட்புணையு முற்பவக்கார் கோளைக் கடப்பதற்குன்
றாட்புணைதா வேலா யுதா. (௩௨)

கைகா லதிர்ப்படையக் கண்டோர்கண் முற்றுநகை
செய்காலம் வந்தெனக்குச் சேராமுன்—மெய்காட்டி
வாராயோ வென்னெதிரில் வந்தெனக்குன் பொன்னடியைத்
தாராயோ வேலா யுதா. (௩௩)

கல்லே னகமொழியக் காட்டுமறை வாக்கினெறி
நில்லே னகமிலனா நேசியேன்—எல்லிரவுஞ்
செய்வ திழிதொழிலித் தீமையகன் றெந்நாளில்
உய்வதியான் வேலா யுதா. (௩௪)

சாற்று மனவிகற்ப சங்கற்பத் தோற்றரவை
மாற்றியுனை நோக்கி மகிழாமற்—காற்றில்
அலைந்தேகும் பஞ்செனவிங் கைம்பொறிவா யுள்ளம்
உலைந்தேனே வேலா யுதா. (௩௫)

மூன்றவத்தைக் கப்பான் முழுத்துரிய வுண்மைநிலத்
தான்றவத்து நீயென் றறியாதான்—மூன்றவத்தை
அந்திபக லோயாம லாற்றுவதா லென்பயனைத்
தந்திடுமோ வேலா யுதா. (௩௬)

வையமிசை யூர்ந்தினும்யான் வாராம லாளமயில்
வையமிசை யூர்ந்து வரல்வேண்டுந்—துய்யவருட்
சத்தியனே கந்திகழுஞ் சத்தியனே குக்குடநற்
சத்தியனே வேலா யுதா. (௩௭)

சாதுசங்க நாடிமனஞ் சாராம லெந்நாளும்
மாதுசங்க நாடி மயங்கினேன்—ஓதுசங்கஞ்
சக்கரஞ்சேர் நற்கரத்தான் றன்மருகா மன்பிரகா
சக்கரஞ்சேர் வேலா யுதா. (௩௮)

என்னவத்தை யெல்லா மெடுத்தெடுத்துக் கூறியுநீ
இன்னமிரங் காதிருந்தா லென்செய்வேன்—சென்னிமிசை
ஆறுடையா னீன்றருண லாறுடையா யானனங்கள்
ஆறுடையாய் வேலா யுதா. (௩௯)

காலங் கடந்த கரிப்பொருளே பொய்யிலர்க்குச்
சீலங்க டந்தருளுஞ் சீமானே—மேலருணை
யங்கிரியாய் நாயேனை யங்கிரகித் தாள்கருணை
யங்கிரியாய் வேலா யுதா. (௪௰)

ஆய்ஞானத் தோரணையின் பானுபவ ரன்றியுனை
வாய்ஞானத் தோரணைய வாய்க்குமோ—தூய்ஞானம்
உள்ளானே சர்வசம முள்ளானே யென்பிழையை
உள்ளானே வேலா யுதா. (௪௧)

தாகமற நின்றுசக சானுபவ சித்தியுறற்
கோகைமலிந் தோர்வாக் குரைசெய்வாய்—கோகநகப்
போதயனுக் குத்தளையைப் பூட்டியரற் கோதியஞா
னோதயனே வேலா யுதா. (௪௨)

எந்நோய் வருத்திடினு மென்றனுக்குக் கந்தர்ப்பன்
றன்னோய் வருத்தாத் தகையருள்வாய்—பொன்னாட்டர்
சூழ்ந்துவகை கொண்டாடித் தூய்மலரா லர்ச்சித்துத்
தாழ்ந்திறைஞ்சும் வேலா யுதா. (௪௩)

எக்கால நின்னடியார்க் கேற்றப்ணி யாற்றுவனோ
எக்காலம் பற்றற் றிருப்பேனோ—எக்காலந்
தத்துவங்க ளோய்ந்தபிர தானநிலை காண்பேனோ
சத்துவனே வேலா யுதா. (௪௪)

சண்ட னடர்ப்பானோ தாரணியின் மீட்டுமயன்
பண்ணட வினையாற் படைப்பானோ—அண்டர்

படைசூழ்ந்து போற்றிடுநின் பாதமலர் மேலன்
புடையானை வேலா யுதா. (௫௫)

காமங் கொடுஞ்சீற்றங் கள்ளமுத லானதும்போய்
சேமங்கொ டுன்னை நினைந்தெந்நாள்—வாமங்கொள்
எண்டுவக்கின் மானமிலா தெம்மனையி னும்பலியேற்
றுண்டுவப்பேன் வேலா யுதா. (௫௬)

பூதங்க ளைந்தாற் பொறிகரணத் தால்வினையும்
ஏதங் களைந்தார்க் கெளியானே—பூதலத்தில்
அன்னைபிதா தெய்வமெனை யாதரிப்பா ராருமிலை
உன்னையலால் வேலா யுதா. (௫௭)

இப்பாரிற் பெண்பா லியாவரையு மென்றாய்போ
லெப்போதும் யான்கண் டிருக்கவருள்—ஒப்பேதும்
இல்லா தனவரத மேகவொளி யாயிலகுஞ்
சல்லாப வேலா யுதா. (௫௮)

எத்தனையோ சென்மமெடுத் திங்கிலமே லுன்னைமறந்
தித்தனைநாட் பட்ட விடர்போதுஞ்—சித்தம்
இனியா கினுமிரங்கி யென்கவலை தீராய்
தனியான வேலா யுதா. (௫௯)

வேதச் சிரமிசையோ விண்ணாதி யைந்திடையோ
ஆதிபர நாதவிந்துக் கப்பாலோ—பேதமிலாத்
தோற்றமுளார் நெஞ்சகத்தோ தோய்ந்திடல்நீ யானறியச்
சாற்றிடுவாய் வேலா யுதா. (௬௰)

பொய்விட் டிடார்மருவாப் புண்ணியனே நாயேனைக்
கைவிட் டிடாமற் கடைக்கணித்தாள்—செய்வை
நிரஞ்சனனே நிர்க்குணனே நின்கழற்குக் கோடி
தரஞ்சரணம் வேலா யுதா. (௬௧)

ஆக்குஞ் சடாக்கினிகோ பாக்கினிகா மாக்கினிரா
காக்கினியு டன்றீப னுக்கினிபஞ்—சாக்கினியில்
மாட்டிவிடாய் கொள்ளாதுன் மாக்கருணை யாரமுதை
யூட்டிவிடாய் வேலா யுதா. (ருஉ)

அம்புயத்தோன் வாழ்வு மரவணையோன் றன்சீரும்
உம்பர்முத லானோ ருறும்பதமும்—இம்பரிடை
நின்னடிமேன் மாறுத நேயமுளா ரோர்பொருளா
யுன்னுவரோ வேலா யுதா. (ருங)

மோகாந்த காரமதின் மூழ்கிமனஞ் சோராமுன்
ஏகாந்த நிட்டை யெனக்கருள்வாய்—மாகாந்த
சுத்தகன நித்யசுய சோபிதசின் மாத்ரசுக
வித்தகனே வேலா யுதா. (ருச)

ஊசலையொத் தென்னெஞ் சொருநிமிட நில்லாதை
வாசலிடஞ் சென்றுகித மாழ்குவதென்—மாசறவே
நிற்குமுணர் வீந்தா ளினைத்தபெப்பர் யாவருளார்
சற்குணனே வேலா யுதா. (ருரு)

மேதினியங் காதியெலா மித்தைமித்தை மித்தையென
ஓதிடல்போற் சத்திக்கு மொண்சிலம்பார்—மாதுவள்ளி
நாயகனே நின்கழலை நம்பினே னென்றனுயிர்த்
தாயகனே வேலா யுதா. (ருசு)

வாயார நின்புகழை வாழ்த்தியகோ ராத்திரமின்
நேயானு பூதிநிலை நில்லாமல்—நாயேன்
அடலெடுத்த வாரிதிரு ழம்புவிக்கண் வாளா
உடலெடுத்தேன் வேலா யுதா (ருஎ)

கோடிபிழை யான்செயினுங் கொள்ளாம லிப்போதென்
வாடிமுகம் பார்த்தேனும் வந்தருளோர்—கோடையு

குஞ்சரத்தி னுக்கிளைய கோமானே நின்றிருப்பா
தஞ்சரணம் வேலா யுதா (௫௮)

அன்பைப் பெருக்கு மறிவாளர்க் கந்தமிலா
இன்பைப் பெருக்கு மிறையோனே—வன்பாம்
பவம்புரிவேற் றிச்சைவயிற் பாயாதென் றுண்மைத்
தவம்புரிவேன் வேலா யுதா (௫௯)

வைதோரைக் கண்டே மகிழ்ந்திருக்க வும்மிகழ்வு
செய்தோர் தமக்கிதமுஞ் செய்யவருள்—பொய்தோன்றாப்
புத்தமனு நீதபரி பூரணமோ னாகார
உத்தமனும் வேலா யுதா. (௬0)

மேவினனைவேண்டேன்பெண்வேண்டேன்பொருள்வேண்டே
பாவினனை வேண்டேன் பதிவேண்டேன்—காவியநூற் [ன்
றோண்டுவதும் வேண்டேனின் றுய்யபத மொன்றேயான்
வேண்டுவது வேலா யுதா. (௬௧)

தெள்ளுமுதி னற்கவியுஞ் சேருணர்ந்து கூறிடினும்
உள்ளகலை முற்றுமுணா யோர்ந்திடினும்—உள்ளம்
அயர்ந்தோர்மா தல்குலிடத் தாவலுறும் பேர்கள்
உயர்ந்தோரோ வேலா யுதா. (௬௨)

மாதாநற் றாதா மனைகிளைஞர் செல்வமக்
காதார மென்றாழ்ந் தலக்கணுறு—தீதனைத்தும்
மித்தையெனக் கண்டயர்ந்துன் மெய்யடியென் றும்மறவா
வித்தையருள் வேலா யுதா. (௬௩)

காமக் கலிவருமோ கன்மக் கலிவருமோ
ஏமக் கலிவருமோ வென்றயர்வார்—சேமம்
புணரா ரியனருளும் போதமுதிர்ந் துன்னை
உணரார்தார் வேலா யுதா. (௬௪)

மோனநிலை யென்பதுவு முத்திநிலை யென்பதுவும்
ஞானநிலை யென்பதுவு நாடுங்கால்—ஆனநிலை
மாறுளதோற் றத்தினுள மாய்ந்தநிலை யல்லாமல்
வேறுளதோ வேலா யுதா (சுரு)

சொல்லியவே தாங்கமெலாந் தோமறவே கற்றதனுன்
மெல்லியலா ராசை விரவாமல்—நல்லியல்பு
வாய்ந்திருப்ப ரேனும் வரும்வினைக ளின்னையலால்
ஓய்ந்திடுமோ வேலா யுதா (சுசு)

காமாலை கொண்டவர்கள் காண்பொருளைக் காணுமியல்
ஆமாறு தேகமியா னுமெனக்கொண்—டேமாந்தோர்
முற்றுணர்வார்ந் தோரையுமம் மோகமதாற் றம்போல
உற்றுணர்வார் வேலா யுதா. (சுஎ)

தர்ப்பணத்தைப் பார்ப்பவர்க்குத் தன்வதனச் சாயையலால்
எப்பொழுதும் வேறொன் றெதிர்தோன்று—தப்பரிசே
அன்னநிகர் நல்லரல்ல ராக்காண்டல் காணுமவர்
தன்னினைவே வேலா யுதா. (சுஅ)

அற்கா வலாகநுனை யன்னக்காண் புண்ணுடலைக்
கற்காவ லாகக் கருதியே—சொக்காதி
தேடநினைந் தாகுலிக்குந் தீவினையே வீதொருங்கும்
வீடநினை வேலா யுதா. (சுகூ)

வாக்குற் றுரைப்பதுவும் வன்மனமுற் றுன்னுவதும்
நோக்குற்று நோக்குவது நோக்குங்கால்—நீக்கமிலா
தொன்றுயிர்யா வற்றிற்கு மோருயிரா முன்னையலா
தொன்றுளதோ வேலா யுதா. (எ0)

மங்களஞ்சேர் வாணி மணவாளன் றன்படைப்பும்
பங்கயக்க ணச்சுதன்றன் பாலிப்பும்—பொங்குவிடம்

உண்டா னழிப்புநின்னன் புற்றானை யுற்றார்பால்
உண்டாமோ வேலா யுதா. (௭௧)

பொன்னாதி யாசை பொருத்துவனீ யஃதையொழித்
தென்னாவி யைச்சுகத்தி லேற்றுவனீ—என்னால்
விடுப்பதெது கொள்வதெது மித்தையென விங்ஙன்
தடுப்பதெது வேலா யுதா. (௭௨)

வாகீ சராதிபரா மாதவர்போற் றீசன்முடிப்
பாகீரதிபயந்த பாலகா—வாகீன்ற
சண்முகனே யுன்றன் றரிசனத்தைக் காட்டியெனை
உண்முகஞ்செய் வேலா யுதா. (௭௩)

சாற்றலுறுங் கானற் சலம்போற் பிரபஞ்சத்
தோற்றமெனச் சான்றோர் சொலக்கேட்டுந்—தேற்றமிலா
தின்னுமிதி லுள்ளழுந்த லென்குறையோ முன்வினையோ
உன்னருளோ வேலா யுதா (௭௪)

கண்டலத்தெத் தோற்றமுநேர் கண்டுமயர் வெய்தாமன்
மண்டலத்தென் போல்வார்புன் மாதருவைக்—கண்டுமையல்
பூண்டுழல நீயமைத்தல் போதனுக்கு மிக்கதொழில்
வேண்டுமென்றோ வேலா யுதா. (௭௫)

நாட்டிற் கருணிதியா நக்கீர தேவரியற்
பாட்டிற் கருளியகிர் பாகரனே—நாட்டுங்
கொடும்படிறர் தந்தொடர்பைக் கொள்ளா தகற்றி
விடும்படிசெய் வேலா யுதா. (௭௬)

கல்லோ தருவோ கருந்தாதோ காரிருள்சேர்
அல்லோ துயர்வா ழகந்தானோ—பொல்லா
விடையமய மாயுழன்றுன் மெய்யருளை நாடாக்
குடையமனம் வேலா யுதா. (௭௭)

கண்டோசெந் தேனோ கனியோ கடலமுதோ
விண்டோர் நிவாத விளக்கொளியோ—விண்டோயாத்
தெள்ளம் பரமோ சிதம்பரமோ நின்னடியார்
உள்ளாந்தான் வேலா யுதா. (எஅ)

முன்னும்ப ரங்கிரியா மொய்ம்புதவி யாண்டருளும்
மின்னும் பரங்கிரியார் மெய்ப்பரமே—மன்னுமல
வன்பாரம் பொன்று மதிதந்து காத்தருளல்
உன்பாரம் வேலா யுதா. (எகூ)

பேரலைவாய்க் கங்கைமுடிப் பெம்மா னகமகிழச்
சீரலைவாய் மேவுஞ் சிகாமணியே—பாரலைவா
யுற்றிடினும் வாடா வுணர்வுருவா நிற்கவருள்
வெற்றிபுனை வேலா யுதா. (அ0)

சருவா வினந்தழைக்குஞ் சற்குணர்கள் சூழுந்
திருவா வினன்குடிவாழ் செல்வா—மருளோர்
சுளியாக் குரம்பைத் தொடக்கறுத்தின் றென்னை
வெளியாக்கு வேலா யுதா. (அக)

கருவே ரகத்துறையாக் கண்காட்சி நல்குந்
திருவே ரகத்துறையுஞ் சேயே—குருவாய்
நிறங்குலவுன் றாணிழற்கீழ் நின்றென் றுறங்கா
துறங்குவனோ வேலா யுதா. (அஉ)

சென்றுசோ யாச்சுகமாஞ் சித்தியடி யார்க்கருளிக்
குன்றுதோ றாடுங் குருபரனே—வன்றுயரில்
இத்தா ரணிக்கணெனை யெத்தனைநாள் வைத்திருப்பாய்
வித்தார வேலா யுதா. (அ௩)

வாலைமலைச் செல்வியருண் மைந்தா பழமுதிர்பூஞ்
சோலைமலைச் செல்வச் சுகோதயனே—மேலுமெனக்

இம்மதமோ கம்மிருப்ப தென்னே திருவுளத்துன்
சம்மதமோ வேலா யுதா. (௮௪)

உன்னும் பலன்முழுது மோவா துகந்திடுஞ்சீர்
மன்னும் பழனி மலைக்கரசே—நின்னிற்
களிப்படுமெய்த் தொண்டர் கருத்துலகில் யார்க்கும்
வெளிப்படுமோ வேலா யுதா. (௮௫)

அதிர்காமத் தம்புதையா தன்பருயிர் காக்குங்
கதிர்காமத் தம்புரிவாழ் கந்தா—கதிர்காணும்
வன்பனிபோ லென்வினைகண் மாய்ந்தேக நல்லமருந்
துன்பதமே வேலா யுதா. (௮௬)

தேட்டத் தமரர்குழாஞ் சேவைசெயப் பூங்குமர
கோட்டத் தமர்ந்த குருபரனே—வாட்டமெலா
மாய்க்கு முண்மை தந்தளிக்கும் வள்ளலே நின்கருணை
தாய்க்குமுண்டோ வேலா யுதா. (௮௭)

கன்னிமலை யன்ன கனதனப்பா லுண்டுயர்ந்த
சென்னிமலைக் கண்ணுறையுந் தேசிகா—நன்னிலையை
நாடுவதென் னெஞ்சவிர்த நண்ணுமலைவாய்க்கண்
ஓடுவதென் வேலா யுதா. (௮௮)

கருத்தணிகை யாய்ந்தோர்கண் காணவெளி வந்தே
திருத்தணிகை மாநகர்வாழ் தேவே—பருத்திளைக்குந்
தேகந்தா வேலாமுன் சிற்றறிவே னுய்வதற்கோர்
யூகந்தா வேலா யுதா. (௮௯)

கூரூர்வாட் கண்மடவார் கூட்டுறவற் றோர்பரவும்
போரூர்வா ழாறுமுகப் புத்தேளே—பாரூடு
நெஞ்சலந்தி னைம்பொறிக ணேரின்றி மாறுறுமென்
சஞ்சலந்தீர் வேலா யுதா. (௯0)

செஞ்சுடர்தேங் கில்லிலிருள் சேருமோ சந்ததமென்
நெஞ்சுளறி வாய்நிறைந்து நீயிலங்கத்—துஞ்சலறு

விண்டாகு மாயைமுதல் வெவ்வினையு மற்றதுமெங்
குண்டாகும் வேலா யுதா. (௬௧)

நாதனுல காருயிர்க்கு நற்சரியா யுள்ளதுநீ
ஓதரிய பூரணமா யுள்ளதுநீ—வேதமறை
யுள்ளதுநீ யென்றுதுணிந் தோர்க்கயலோர் பேரின்பம்
உள்ளதுவோ வேலா யுதா. (௬௨)

உள்ள வயிறோ வொருசா ணிதற்குணவு
கொள்ளவனந் தங்கவலை கொண்டுமனஞ்—சள்ளைநிதம்
உற்றிருப்ப தல்லா லுனைநினையப் போழ்தெனக்குச்
சற்றிலையே வேலா யுதா. (௬௩)

உண்மைசுக சித்தா யுனையுணராப் பேதையர்க்கே
பெண்மயக்க மெத்தப் பெரிதாகும்—உண்மைநிலை
சண்டார்க்குச் சற்றுங் கனவினுமக் காரிகைமால்
உண்டாமோ வேலா யுதா. (௬௪)

அத்திபுலாற் றோலாதி யாமுடலை நானென்னும்
பித்தறலே சைவப் பெருஞானம்—மித்தையதாய்ச்
சைவனென்றோர் நாமந் தரித்துடலே தானென்போர்
உய்வதென்றோ வேலா யுதா. (௬௫)

சித்தம் பகிர்முகமாச் செல்லாம லையனருள்
வித்தையினைக் காப்பே விரதமலாற்—சுத்த
அவமாமோ காதிதரு மன்னியநோன் பெல்லாந்
தவமாமோ வேலா யுதா. ௬௬)

ஓசையற்ற கண்டையைப்போன் றோதலொழிந் தொன்றிடத்
ஆசையற்று நிற்பதுவே யாசாரம்—பேசும் [தும்
வழக்கமுறை யாசார மற்றனைத்துஞ் சுத்தச்
சழக்கமுறை வேலா யுதா. (௬௭)

தேசிகனைத் தேடாமற் றேசிகனைக் காணாமற்
றேசிகன்சொல் வாக்கினின்று தேறாமற்—றேசிகனைக்
கொண்டாடிப் பாடாமற் கோதற்ற மெய்ஞ்ஞானம்
உண்டோமோ வேலா யுதா. (௬௮)

மன்னுலகோர் தன்னை மதிக்கநினைந் தென்போல்வார்
தின்னமதாக் காட்டுஞ் செயலெவையும்—எண்ணினனை
யுள்ளபடி யுற்றுணரார்க் குள்ளனவல் லாலுணர்ந்தோர்க்
குள்ளனவோ வேலா யுதா. (௩௯)

வாய்க்குவரு மோசையினல் வைகிடினு மின்றெடுத்த
தாய்க்குவரு மோசலிப்புத் தன்சேய்மேற்—பாக்குயிற்றும்
வண்மைதெரி யாயான் வழுத்துமொழி யாதெனினும்
உண்மகிழ்வாய் வேலா யுதா. (௧௪௦)

வேலாயுதவெண்பா முற்றிற்று.

---

## தனியன்கள்.

ஓட்டும் பவப்பிணியை யொன்றிரண்டென் னுநிலையைக்
காட்டுமுயர் பக்குவர்க்கங் கைக்கனிபோல்—சேட்டமுறு
நாலா மறைகள்புகழ் ஞானகுரு தேசிகனும்
வேலா யுதன்பாத மே.

வானதி யானவனு மண்மேற் சிவாகந்தக்
கோனகி வந்தெனையாட் கொண்டவனுந்—தானு
யிருப்பவனு மென்னுளிருந் திவ்வெண்பா நூலும்
உரைத்தவனும் வேலா யுதன்.

வாழி

சற்குருதாள் வாழ்க சகம்வாழ்க விந்நூலைக்
கற்குமவர் கேட்போர் களும்வாழ்க—மிக்கமறை
வாழ்கமயில் வேல்வாழ்க வள்ளிதெய்வ யானையுடன்
வாழ்கமுரு கன்றுன் மலர்

முருகன்றுணை